# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2275 - 2022 අප්‍රේල් මස 08 වැනි සිකුරාදා - 2022.04.08

*2275 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 634 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 637 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 640 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** இலங்கை கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2022, மாச்சு மாதம் 25ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, ஏப்பிறல் மாதம் 29ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

633 - B 082331 - 5403 (2022/04)

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கைப் புகையிரத சேவைகள்

விலைமனுக்களுக்கான அழைப்பு

கீழ் மாவட்டத்திலுள்ள கரையோர பாதையில் 36M 47C பேருவளை முதல் அளுத்கமவுக்கிடையிலுள்ள பாவிக்க முடியாத பாலச் சீவல்களை ( Condemned Bridge Scrap) அப்புறப்படுத்தல் - SRS/ F. 7801

1.இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள் திணைக்களப் பெறுகைக் குழுவின் ( உயர் மட்டம்) தலைவர் கீழ் மாவட்டத்திலுள்ள கரையோர பாதையில் 36M 47C பேருவளை முதல் அளுத்கமவுக்கிடையிலுள்ள ஏறக்குறைய 50 மெ.தொ. பாவிக்க முடியாத பாலச் சீவல்களை ( Condemned Bridge Scrap) இரத்மலானை முற்றவெளியிலுள்ள இலகுரக உலோக சீவல்களை அப்புறப்படுத்துவதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகளைப் பெற்றுக்கொள்வார்.

2. 2022.04.20 ஆந் திகதியன்று பி.ப.2.00 மணிக்கு விலைமனுக்களை ஏற்கும் காலம் முடிவுறும்.

3. 2,100.00 ரூபா ( இரண்டாயிரத்து நூறு ரூபா) மட்டும் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தை புகையிரத சேவைகள் பிரதான நிதி அதிகாரி அலுவலகத்திற்குச் செலுத்துவதன் பேரில் 2022.04.19 ஆந் திகதியன்று பி.ப. 3.00 மணி வரையில் கொழும்பு10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத சேவைகள் பிரதிப் பொது முகாமையாளர் ( பெறுகைகள்) அலுவலகத்திலிருந்து பெறப்படக்கூடியதான படிவங்களில் மட்டுமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. இலங்கைப் புகையிரத சேவைகளின் பிரதிப் பொது முகாமையாளர் ( பெறுகைகள்) அலுவலகத்தில் வைத்து, விலைமனுக்களை ஏற்கும் காலம் முடிவடைந்த உடனடியாகவே அவை திறக்கப்படும். விலை கூறுநர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் சமயத்தில் அங்கு சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பதிவஞ்சல் மூலமாகவோ அல்லது நேரில் ஒப்படைப்பதன் மூலமாகவோ பின்வருபவருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக்குழு, ( உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்,
பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அலுவலகம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10.

6. விலை மனு ஆவணங்களை புகையிரத சேவைகள் பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

7. மேலதிகத் தகவல்கள் தேவைப்படுமாயின் புகையிரத சேவைகள் பிரதிப் பொது முகாமையாளர் ( பெறுகைகள் ) அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கங்கள் : 2438078 அல்லது 2436818.
தொலைநகல் இல. . : 2432044.
மின்னஞ்சல் : tender2@railway.gov.lk
இணையத்தளம் : www.railway.gov.lk

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு
( உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

குறிப்பீட்டு இல.: SRS/ F.7801

4- 112

---

## இலங்கைப் புகையிரத சேவைகள்

பெறுகை அறிவித்தல்

இலங்கைப் புகையிரத சேவைகளுக்கு RAIL BENDERS - MECHANICAL (02 WAY) AND PORTABLE SLEEPER DRILLING MACHINES களை வழங்குவதற்கான பெறுகை

பெறுகை இலக்கம்: SRS/F. 7795

இலங்கைப், புகையிரத சேவைகளிற்கு Rail Benders Mechanical (02 way) and Portable sleeper Drilling Machine களை வழங்குவதற்காக, உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள், இலங்கை புகையிரதச் சேவைகளின் திணைக்கப் பெறுகைக் குழுத் தலைவரினால் (மேஜர்) சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக்கோரும் முறைமையின் அடிப்படையில் கோரப்படுகின்றன.

விலைமனுதாரர்கள் தம் விலைமனுக்களை, நேரடியாக அல்லது இலங்கையில் தர அங்கீகாரம் பெற்றுள்ள பதிவு செய்யப்பெற்ற முகவர் மூலம் மற்றும் அற்றோணி அதிகாரம் பெற்ற முகவர் மூலம் சமர்ப்பிக்கலாம்.

| *Itm No.* | *Description* | *Qty.* |
|---|---|---|
| 01. | Rain Benders Mechanical (02 way) | 50 Nos. |
| 02. | Portable sleeper Drilling Machines | 25 Nos. |

2. விலைமனுக்கள் 2022.05.10 ஆந் திகதியன்று பி.ப.2.00 மணிக்கு மூடப்படும்.( இலங்கை நேரம்).

3. பிரதிப் பொது முகாமையாளரின் (பெறுகை) அலுவலகத்தில் அல்லது வெளிநாட்டு இலங்கை தூதுவரங்களில் (இலங்கை நேரம்) பி.ப. 3.00 மணி வரையும் 2022.05.09 ஆந் திகதியன்று மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமான 8,000.00 ரூபாவை அல்லது இலகுவாக மாற்றக்கூடிய நாணயத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. விலைமனுக்கள் மூடப்பட்ட பின்பு உடனடியாக பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகை) அலுவலகத்தில் திறக்கப்படும்.

5. விலைமனுதாரர் ரூபா 300,000.00 தொகைக்கான விலைமனுப் பிணையமொன்றை வழங்கல் வேண்டும். அல்லது அவர்களின் விலைமனுவின் பகுதியொன்றாக இலகுவில் மாற்றக்கூடிய நாணயத்திற்குச் சமமான தொகையொன்று.

6. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக,

தலைவர்,
திணைக்களப் பெறுகைக்குழு, ( மேஜர்),
இலங்கைப் புகையிரத சேவைகள்,
பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகை),
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10. இற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

7. விலை மனுப் படிவங்களை இலவசமாக பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகை) இன் அலுவலகத்தில் பரிசீலிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்.

தொலைபேசி இலக்கங்கள் : 2438078 அல்லது 2436818.
தொலைநகல் இல. . : 2432044.
மின்னஞ்சல் : tender2@railway.gov.lk
இணையத்தளம் : www.railway.gov.lk

தலைவர், (உயர் மட்டம்),
திணைக்கள பெறுகைக் குழு
இலங்கை புகையிரத சேவைகள்.

குறிப்பீட்டு இல.: SRS/ F.7795

4- 180

## இலங்கைப் புகையிரத சேவைகள்

விலைமனுக்களுக்கான அழைப்பு

பாவனைக்கொவ்வாத என்ஜின்கள் மற்றும் ரயில் பஸ்களை அகற்றல்
Contract No.: SRS/ F. 7721

இலங்கைப், புகையிரத சேவையிலுள்ள பாவனைக்கொவ்வாத என்ஜின்கள் மற்றும் இரயில் பஸ்களை அகற்றுவதற்காக தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் அடிப்படையில் கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கைப் புகையிரத சேவைகள், திணைக்கள பெறுகைக் குழுத் ( உயர் மட்டம்) தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார்.

2. விலைமனுக்கள் 2022.04.22 ஆந் திகதியன்று பி.ப.2.00 மணிக்கு மூடப்படும்.

3. மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 5,000 ரூபாவை (ஐயாயிரம் ரூபாவை) மட்டும் செலுத்திய பின்னர், 2022.04.21 ஆந் திகதியன்று பி.ப.3.00 மணி வரையும் கொழும்பு10, ஒல்கொட் மாவத்தை, இலங்கைப் புகையிரத சேவைகள், பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. விலைமனுக்கோரல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, 3,25,000.00( மூன்று இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா) பெறுமதியான விலைமனுப்பிணையொன்று விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

5. கொழும்பு 10, இலங்கைப் புகையிரத சேவைகள், பெறுகைக்கான பிரதிப் பொது முகாமையாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

6. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாகவே ஒப்படைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக்குழு, ( உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்,
பிரதிப் பொது முகாமையாளர்
அலுவலகம்(பெறுகை),
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10.

7. கொழும்பு 10, இலங்கைப் புகையிரத சேவைகள், பெறுகைக்கான பிரதிப் பொது முகாமையாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாமென்பதுடன் மேலதிக விபரங்களுக்கு பின்வரும் வழிகளூடாக தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கங்கள் : 94(11) 2438078 அல்லது 94(11)2436818.
தொலைநகல் இல. . : 94(11)2432044.
மின்னஞ்சல் : tender2@railway.gov.lk
இணையத்தளம் : www.railway.gov.lk

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு
( உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

4- 152

---

**இலங்கைப் புகையிரத சேவைகள்**

விலைமனுக்களுக்கான அழைப்பு

கொழும்பு, இரத்மலானை, தெமட்டகொட மற்றும் ஏனைய முற்ற வெளிகளிலுள்ள பாவிக்க முடியாத வண்டிகள் மற்றும் வெகன்களை அப்புறப்படுத்தல்

ஒப்பந்த இல.- SRS/ F. 7815

1. கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கைப் புகையிரத சேவைகள் திணைக்களப் பெறுகைக் குழுவின் (உயர் மட்டம்) தலைவர் இலங்கைப் புகையிரத சேவையின் கொழும்பு, இரத்மலானை, தெமட்டகொட மற்றும் ஏனைய முற்றவெளிகளிலுள்ள பாவிக்கமுடியாத வண்டிகள் மற்றும் வெகன்களை அப்புறப்படுத்துவதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகளை பெற்றுக்கொள்வார்.

2. 2022.04.21 ஆந் திகதியன்று பி.ப.2.00 மணிக்கு விலைமனுக்களை ஏற்கும் காலம் முடிவுறும்.

3. 12,000.00 ரூபா ( பன்னிரெண்டாயிரம் நூறு ரூபா மட்டும்) மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தை செலுத்துவதன் பேரில் 2022.04.20ஆந் திகதியன்று பி.ப. 3.00 மணி வரையில் கொழும்பு10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத சேவைகள் பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அலுவலகத்திலிருந்து பெறப்படக்கூடியதான படிவங்களில் மட்டுமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. விலைமனுக்களுடன் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் 4,00,000.00 ரூபா நான்கு இலட்சம் ரூபா தொகைக்கான விலைக்கோரல் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. இலங்கைப் புகையிரத சேவைகளின் பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைககள்) அலுவலகத்தில் வைத்து, விலைமனுக்களை ஏற்கும் காலம் முடிவடைந்த உடனடியாகவே அவை திறக்கப்படும். விலை கூறுநர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் சமயத்தில் அங்கு சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

6. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பதிவஞ்சல் மூலமாகவோ அல்லது நேரில் ஒப்படைப்பதன் மூலமாகவோ பின்வருபவருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக்குழு, (உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்,
பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அலுவலகம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10.

7. விலை மனுஆவணங்களை கொழும்பு10, புகையிரத சேவைகள் பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

8. மேலதிக தகவல்கள் தேவைப்படுமாயின் புகையிரத சேவைகள் பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அலுவலகத்தைத் தொடர்புகொள்ளவும்.

தொலைபேசி இலக்கங்கள் : 94(11) 2438078 அல்லது 94(11)2436818, 0114600209.

தொலைநகல் இல. . : 94(11)2432044.
மின்னஞ்சல் : tender2@railway.gov.lk

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு
(உயர் மட்டம்),
இலங்கை புகையிரத சேவைகள்.

குறிப்பீட்டு இல.: SRS/ F.7815

4- 153

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 5 ஆவது பிரிவின் கீழ் பின்வரும் நிறுவனத்தின் கூட்டுறவு தொடர்பான அறிவிப்பு.*

*நிறுவனத்தின் பெயர்:* குவன்டம் குவாட்ஸ் ( பிறைவட்) லிமிடட்
*நிறுவனத்தின் பதிவு இலக்கம்:* பீவீ 105865
*பதிவு செய்யப்பட்ட திகதி :* 2015.05.26
*பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:* இல.105/1, மாதுபிடிய வீதி, மஹாவில, பாணதுறை

S C Ranganath A Fernando,
கம்பனிச் செயலாளர்.

4-127

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 5 ஆவது பிரிவின் கீழ் பின்வரும் நிறுவனத்தின் கூட்டுறவு தொடர்பான அறிவிப்பு.*

*நிறுவனத்தின் பெயர்:* கல்பாத்த குவாரி புரொடக்ட்ஸ் (பிறைவட்) லிமிட்டட்
*நிறுவனத்தின் பதிவு இலக்கம்:* பீவீ 00227924
*பதிவு செய்யப்பட்ட திகதி :* 2020.09.23
*பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:* இல.202, ஹொரண வீதி, மஹாவில, பாணதுறை

S C Ranganath A Fernando,
கம்பனிச் செயலாளர்.

4-128

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) இன் அடிப்படையில் பின்வரும் நிறுவனம் இணைக்கப்பட்டது என்று அறிவிப்பு இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.*

*நிறுவனத்தின் பெயர்:* பென்டெக் இன்ஜினியர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்
*பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:* 07, ஃபர்னி லங்கா வீதி, வல்பொல
*ருக்கஹவில இணைக்கப்பட்ட திகதி :* 2021.03.14
*பதிவு எண்.:* பீவீ 236504

கம்பனிச் செயலாளர்.

4-142

## அற்றோணிப் பத்திரத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 5, பொல்ஹங்கொட வீதி, இல. 22/246 இல் வசிக்கும் துஷ்மந்தகுமார பத்மதேவ கரன்னாகொட (தே.அ.அ.இல. 602780589X) ஆகிய என்னால் நுகேகொட, கோட்டை வீதி, இல. 301A இல் வசிக்கும் ஷெரன் தவீந்திர சூரியாரச்சி (தே.அ.அ.இல.600711482V) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவப் பத்திர இல. 2149, 2016.05.10 ஆந் திகதியில் விஜித்மீகாவத்த சட்டத்தரணியால் எழுதப்பட்ட அற்றோணித் தத்துவப் பத்திரத்தை 2022.03.25 ஆந் திகதி முதல் இரத்துச் செய்வதாக இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

04- 114

## அற்றோணித் தத்துவப் பத்திரத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 13, கொட்டாஞ்சேனை, கல்லூரி வீதி, இல. 90 ஐச் சேர்ந்த சச்சிதானந்தம் ரதீஷ்காந்த் (இலங்கை அடையாள அட்டை இல. 7720507040V) ஆகிய நான், கொழும்பு 13, கொட்டாஞ்சேனை, கல்லூரி வீதி, இல. 90 ஐச் சேர்ந்த இவன்ஜலீன் மஹேஸ்வரி தேவி சச்சிதானந்தம் என்பவரை பெயர் குறிப்பிட்டு நியமித்து கொழும்பு சட்டத்தரணி S.W. களுகல்லவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017, செத்தெம்பர் 25 ஆந் திகதிய இல.20, விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்து இல்லாதொழிக்கின்றேன்.

சொல்லப்பட்ட இல. 20, விசேட அற்றோணித் தத்துவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்கள் மற்றும் விவகாரங்களுக்கு எனது நம்பிக்கையான செயற்பட மேற்படி அற்றோணியை இரத்துச் செய்கின்றேன். இன்றைய தினம் முதல் சொல்லப்பட்ட இவன்ஜலின் மஹேஸ்வரி தேவி சச்சிதானந்தம் என்பவரால் மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன் என்பதையும் இத்தால் அறிவிக்கின்றேன்.

சச்சிதானந்தம் ரதீஷ்காந்த் .

04- 116

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 279, பரகஹதெனிய,வேஉட எனும் முகவரியில் வசிக்கும் முஹம்மது மஹ்ரூப் முஹம்மது ஜெஸ்மி ஆகிய நான், இல. 279, பரகஹதெனிய, வேஉட எனும் முகவரியில் வசிக்கும் முஹம்மது மஹ்ரூப் முஹம்மது ஜெஸ்வான் என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசு எப்.என். அன்ஸார் அவர்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட 2012.04.11 ஆந் திகதியுடைய இல.2398 ஐக் கொண்ட அற்றோணி அதிகாரப் பத்திரம் மூலம் என்னால் கொடுக்கப்பட்டிருந்த அதிகாரத்தை இன்று முதல் இரத்துச் செய்வதாக இலங்கை அரசுக்கும், பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

முஹம்மது மஹரூப் முஹம்மது ஜெஸ்மி.

04- 130

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் வஸ்கடுவ, நுகேகொட, பனாப்பிட்டிய வீதியில் வசிக்கும் தே.அ.அ.இலக்கம் 682172762V உடைய ஆச்சாரிகே நிமல் இந்திரசிறி ஆகிய நான், கடுவெல்லேகம, நீர்கொழும்பு ஹரஹாவில் வசிக்கும் தே.அ.அ.இலக்கம் 198070903959 உடைய சேசத்புர தேவகே நிசான்தி என்பவருக்கு வழங்கப்பட்டதும், 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 03 ஆந் திகதி நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசு திருமதி சாந்தனி தயாரத்ன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 13386 ஆம் இலக்கமுடைய விசேட அற்றோணித் தத்துவமானது இத்தால் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதெனவும், இதன் பின்னர் என் சார்பில் அவர் மேற்கொள்ளும் எவ்வித நடவடிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்கள் தொடர்பாக நான் பொறுப்புதாரியல்ல எனவும் மேலும் அறிவித்துக் கொள்கின்றேன்.

எம்.ஏ.நிமல் இந்திரசிறி.

04- 133

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

மாகொல, மாகொல தெற்கு, சப்புகஸ்கந்த வீதி, இல.10/பீ/4 இல் வசிக்கும் ஹேரத் முதியன்சேலாகே சரித்த தேவிந்த ( தே.அ.அ.இல.753001328V மற்றும் கடவுச்சீட்டு இல.N8390497) ஆகிய நான், கம்பஹா பகிரங்க நொத்தாரிசு திரு.ஆர்.ஏ.பீ.எம்.பெரேரா வினால் உறுதி செய்யப்பட்ட இல.423 மற்றும் 2019, திசெம்பர் 27 ஆந் திகதிய விசேட அற்றோணி மூலம் கொழும்பு-03, 5 ஆம் ஒழுங்கை, இல.96 இல் வசிக்கும் ஹேரத் முதியன்சேலாகே ஓமாலி சமுத்ரா (தே.அ.அ.இல.967173010V மற்றும் கடவுச்சீட்டு இல.N7783070) இற்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் 2022.03.22 ஆந் திகதி முதல் இரத்துச் செய்யப்படுவதாகவும் அவரால் இனிமேல் மேற்கொள்ளப்படும் எந்த செயற்பாட்டிற்கும் நான் பொறுப்பாக மாட்டேன் எனவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் சகலருக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

ஹேரத் முதியன்சேலாகே சரித்த
தேவிந்த.

04- 134

## அற்றோணித் தத்துவத்தினை மீளப் பெறல்

இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருவதாவது 2012.10.19 ஆந் திகதியிடப்பட்டு இந்தியா, கேரளா மாநிலம், கசரகோட் மாவட்ட நொத்தாரிசு C. ரவிக்குமரன் நாயர் முன்னிலையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிந்தவூர்-12, வன்னியார் வீதி, இல.206 ஐச் சேர்ந்த அப்துல் கபூர் முஹம்மட் சுஹூட் என்பவரின் பெயரில் இந்தியா, கேரளா மாநிலம், கசரகோட் மாவட்டம், த.பெ. பேக்கல்- 671318, கொட்டிக்குளம், கே.என்.வீட்டில் வசிக்கும் கே.என்.முஹம்மட் ஜிப்ரி ஆகிய என்னால் நிறைவேற்றப்பட்டு பதிவாளர் நாயகத்தின் மட்டக்களப்பு பதிவாளர் நாயக அலுவலகத்தில் 2013.01.04 ஆந் திகதி தொடரிலக்கம் 05 இல் 28 ஆம் இதழில் 21 ஆம் இலக்கப்புத்தகத்தில் பதிவு செய்யப்பட்ட விசேட அற்றோணித் தத்துவம் 2022.01.29 ஆந் திகதி முதல் மீளப்பெறப்படுவதோடு இரத்துச் செய்யப்படுகின்றது. இன்று முதல் மேற்குறித்த அற்றோணித் தத்துவப் பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாக மாட்டேன்.

கே.என்.முஹம்மட் ஜிப்ரி.

04- 140

## அற்றோணித் தத்துவப் பத்திரத்தினை இரத்துச் செய்தல்

UWE BECKER ( கடவுச்சீட்டு இல.C4KJ47986) இல. N48 "த ரெஸ்ட்", நிவாசிபுர, கொட்டுகொட, ஜாஎல ( முன்னர் இல.178, பாசியவத்த, தலாஹேன, நீர்கொழும்பு) ஆகிய நான், 2003.06.09 ஆந் திகதியிடப்பட்ட இல.2997 கொண்டு பிரசித்த நொத்தாரிசு W.F.E. பெர்னாண்டோ அத்தாட்சிப்படுத்திய முகவரி இல. 208/2, லக்ஷ்மன் மாவத்தை, கடற்கரை வீதி, நீர்கொழும்பு எனும் முகவரியைச் சேர்ந்த வர்ணகுலசூரிய மனோரி தில்மினி பெர்னாண்டோவுக்கு வழங்கிய அற்றோணித் தத்துவப் பத்திரத்தை இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறிவிக்கின்றேன்.

UWE BECKER.

ஜா-எல,
2022.03.23.

04- 141

## (வெளிநாட்டு) பொது அற்றோணித் தத்துவப் பத்திரத்தினை இரத்துச் செய்தல்

"விமுக்தி", படியாகம, மாதம்பே என்ற முகவரியில் வசிக்கும் சந்தானம் சதான் ரொசாந்த ஆகிய நான், சமாதான நீதவான் எச்.யூ.ஜயசூர்ய என்பவரினால் 2016.07.08 ஆந் திகதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்ட (வெளிநாட்டு) பொது அற்றோணித் தத்துவத்தின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட "விமுக்தி" படியாகம, மாதம்பே என்ற முகவரியில் வசிக்கும் ஜயவர்தன கொமரகே தொன கிரிஷ்டீன் என்பவரின் அற்றோணித் தத்துவமானது இதன் பின்னர் செயல்வலுப் பெறும் வகையில் இரத்துச் செய்யப்பட வேண்டும் என அனைவருக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

சந்தானம் சதான் ரொசாந்த.

2022.03.28.

04- 144

## விசேட அற்றோணித் தத்துவப் பத்திரத்தினை இரத்துச் செய்தல்

இல. 91,செல்பி வீதி, நீர்கொழும்பு என்ற முகவரியில் வசிக்கும் மிஹிந்து குலசூரிய செபாஸ்டியன் பெர்னாண்டோ ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு அனுஷா பத்மபெரும

என்பவரினால் இல. 605, 2011.04.14 ஆந் திகதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்ட விசேட அற்றோணித் தத்துவத்தின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட இல. 212/3, லுயிஸ் பிளேஸ், குடாப்படுவ, நீர்கொழும்பு என்ற முகவரியில் வசிக்கும் மிஹிந்து குலசூரிய ரவீந்திர ராஜ் என்பவரின் அற்றோணித் தத்துவமானது இதன்பின்னர் செயல்வலுப் பெறும் வகையில் இரத்துச் செய்யப்பட வேண்டும் என அனைவருக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

மிஹிந்து குலசூரிய செபாஸ்டியன்
பெர்னாண்டோ .

2022.03.29.

04- 145

---

## அற்றோணித் தத்துவப் பத்திரத்தினை இரத்துச் செய்தல்

பொல்கஹவெல, அரகொட, தெனகமுவ வத்தையைச் சேர்ந்த விக்ரமகே நம்யா பிரியதர்ஷனி ஜனகதேவி என்ற நான், கே.ஏ.டி.பி.குருப்பு நொத்தாரிசு அவர்களினால் சான்றுப்படுத்தப்பட்ட இலக்கம் 44 அற்றோணிப் பத்திர ரெஜிஸ்டார் திணைக்களத்தில் வடமேல் மற்றும் வடமத்திய பிரிவில் இலக்கம் 2824 ஆம் பக்கத்தில் இலக்கம் 1696 தினப் புத்தகத்தில் பதிவாகியிருக்கும் விசேட அற்றோணிப் பத்திரம் மூலம் இலங்கை குடியரசின் இலக்கம் 343 ஏ, தெனகமுவ வத்த, அரகொட, பொல்கஹவெலயில் வசிக்கும் விக்ரமகே லக்ஷ்மன் விஜித பண்டார என்பவருக்கு அளிக்கப்பட்டிருந்த அனைத்து அதிகாரங்களையும் இத்தால் இரத்துச் செய்யப்பட்டதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இதன் பின்னர் மேற்குறிப்பிட்ட அற்றோணித் அதிகாரத்தின் மூலம் செய்யப்படுகின்ற எந்த செயலுக்கும் நான் பொறுப்பல்ல என்பதையும் மேறிகுறிப்பிட்ட அற்றோணி அனுமதிப்பத்திரத்தின் மூலம் செய்யும் ஒரு விடயம் தொடர்பாக என் மீது பொறுப்புக் கூறப்பட மாட்டாது என்பதையும் அறிவித்துக் கொள்கின்றேன்.

விக்ரமகே நம்யா பிரியதர்ஷனி
ஜனகதேவி.

2022.04.04.

04- 181

---

## அற்றோணித் தத்துவப் பத்திரத்தினை இரத்துச் செய்தல்

கம்பஹா, நந்தன மாவத்தை, 01/A இலக்கத்தில் வசிக்கும் ஜயகொடி ஆரச்சிலாகே ஜயந்த ஞானசிரி ஜயகொடி (தே.அ.அ.இல.763322025V) ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் மக்களுக்கு இவ்வாறு பிரகடனப்படுத்துகின்றேன். காரியவசம் கமராலலாகே தயானி பிரியங்கிகா காரிவசம் பிரசித்த நொத்தாரிசு அவர்களினால் பதிவு செய்யப்பட்ட 487 ஆம் இலக்கம் மற்றும் 2017.12.15 ஆந் திகதிய விசேட அற்றோணி அதிகாரப்பத்திரத்தினால் நியமிக்கப்பட்ட எனது அற்றோணி அதிகார தத்துவதாரரான வேரகொட விதானெலாகே பிரமிலா ஜயகொடி (தே.அ.அ.இல.816020239V) என்பவருக்கு வழங்கியிருந்த விசேட அற்றோணி அதிகாரப் பத்திரம் மற்றும் அற்றோணி அதிகாரம் 2022.03.23 ஆந் திகதியில் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதாகும்.

04- 150

---

## அற்றோணித் தத்துவத்தினை இரத்துச் செய்தல்

இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருவதாவது 2018 ஆம் ஆண்டு தை மாதம் 11 ஆந் திகதியிடப்பட்டு Germany ஐச்சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு Karin Ronsch முகதாவில் நிறைவேற்றப்பட்ட விசேட அற்றோணித் தத்துவப் பத்திரமானது இல.39, சோமசுந்தரம் அவென்யு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருச்செல்வம் மைக்கேல் (தே.அ.அ.இல. 500833017V) என்பவரின் பெயரில் டச் வீதி, சங்குவேலி வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த தற்போது Eschborner Strasse 41A, 61449 Steinbach Germany இல் வசிக்கும் திரு. ஹட்சன் மற்றும் திருமதி புஸ்பமலர் ஹட்சன் ஆகிய எங்களால் நிறைவேற்றப்பட்ட அற்றோணித் தத்துவப்பத்திரம் 2022.03.25 ஆந் திகதி மீளப்பெறுவதோடு இரத்தும் செய்யப்படுகின்றது. இன்று முதல் மேற்குறிப்பிட்ட அற்றோணித்தத்துவகாரரால் மேற்குறிப்பிட்ட அற்றோணித் தத்துவப் பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நடவடிக்கைக்கும் நாம் பொறுப்பாக மாட்டோம்.

திரு. ஹட்சன்,
(திருமதி) புஸ்பமலர் ஹட்சன் .

04- 158

---

## அற்றோணித் தத்துவத்தினை இரத்துச் செய்தல்

இலக்கம்30/20,மெதகொடவீதி,ரண்தொம்பே,அம்பலங்கொட என்ற முகவரியில் வசிக்கும் தே.அ.அ.இல. 842743281V புதிய அடையாள அட்டை இலக்கம் 198427403281V உடைய அமிது சுரஞ்ஜ மென்டிஸ் விஜேசிங்ஹ சமரசேகர ஆகிய நான், பெந்தோட்டை,மிரிஸ்வத்த,கனஹென்தொட்ட என்ற முகவரியில் வசிக்கும் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான திரு. சுதத் பயாகலகேஅத்தாட்சிப்படுத்திய 442 ஆம் இலக்கமுடையதும் 2014, மே மாதம் 22 ஆந் திகதி இட்டதுமானதும், இலக்கம் 30/20, மெதகொட வீதி, ரண்தொம்பே அம்பலங்கொட என்ற முகவரியில் வசிக்கும் திரு. பிரதீப மெண்டிஸ் விஜேசிங்ஹ சமரசேகர (612914216V) என்பவருக்கு வழங்கப்பட்டதுமான அற்றோணித் தத்துவமானது 2022, மாச்சு மாதம் 19 ஆந் திகதி முதல் செயல்வலுப் பெறும் வகையில் இரத்துச் செய்யப்படுகின்ற தெனவும், இத்தினத்தின் பின்னர் என் சார்பில் அவர் மேற்கொள்ளும் எவ்வித கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்புதாரியல்ல எனவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

அமிது சுரஞ்ஜ மென்டிஸ் ,
விஜேசிங்ஹ சமரசேகர.

04- 159

# ஏல விற்பனைகள்

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

ஏ.டீ.ஐ. விஜேதுங்க
கணக்கு இலக்கம் : 1114 5396 0703

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2020.12.16ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2021.04.16ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2021.04.06ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான அறுபத்தைந்து இலட்சத்து நாற்பத்தெட்டாயிரத்து முந்நூற்று இருபத்தொன்பது ரூபா ஐம்பத்தாறு சதம் (ரூபா 6,548,329.56) 2020, நவெம்பர் 11 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை அறுபத்திரண்டு இலட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து நாநூற்று பதினேழு ரூபா எழுபத்தொன்பது சதம் (ரூபா 6,279,417.79) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பன்னிரண்டு தசம் ஐந்து வீதம் (12.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 1597 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபதி என்பவர்கள் மூலமாக 2022.05.04 ஆந் திகதி மு.ப. 10.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளே பல்லே பத்துவின் மஹரகம நகர சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் உடாஹாமுள்ள மேற்கு இல. 525B எனும் கிராம அலுவலர் பிரிவிற்குள் உடாஹாமுள்ளையில் அமைந்த "கெக்குனகாஹாலந்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். ஏ. ஜயரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2020, ஏப்பிறல் 20 ஆந் திகதியிடப்பட்ட இல. 3598 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 37A எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: லொட் 38 ; கிழக்கு: வீதி (20 அடி அகலம்) ; தெற்கு : லொட் 37B மற்றும் மேற்கு : லொட் 36, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஆறு தசம் சைபர் பேர்ச் (0ஏ. 0றூ. 6.0பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 3598 எனும் வரைபடத்திற்கு அமைவாக தெல்கந்தை - நுகேகொடை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் A 11/22 மற்றும் B 213/49 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் யூ. ஏ. எல். சேனாரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 1961, சனவரி 20 ஆந் திகதியிடப்பட்ட இல. 1740 A எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் B, C, D மற்றும் E எனக்குறிப்பிடப்பட்ட வீதி ஒதுக்கத்தின் ஊடாகவும் அதன் மீதும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

4- 99

---

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்

1. கடன்தொடர்பு இலக்கங்கள்: 75441600 மற்றும் 77841716.

ஹிதியமுல்ல சந்தி, ஹெட்டிபொல வீதி, குளியாப்பிட்டிய எனும் முகவரியில் அமைந்துள்ள பிலிப்லீ குளோபல் கம்பனியின் ஈட்டு ஆதனத்தின் விற்பனை. இல. 58/7 முத்துராஜ மாவத்தை, (ஹெந்தல ஒழுங்கை), மாபோல, வத்தளை எனும் முகவரியைச் சேர்ந்த திரு. ரத்துகமகே பிலிப் ஜயசிறி பெர்ணாண்டோ மற்றும் திருமதி ஷெங்யன் லி) ஆகியோர் இதன் பணிப்பாளர்களாவர்.

2.இலங்கை வங்கிக்கட்டளைச்சட்டம் 19 ஆம்பிரிவின் கீழ்இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2019.11.08ஆந் திகதிய 2149ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2019.10.28 ஆந் திகதி "டெய்லி நியூஸ்", "தினமின", மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நில மனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த T&H ஒக்ஷன் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள் 2022.05.11 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### மேற்குறிப்பிட்ட அட்டவணை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கட்டுகம்பொல ஹத்பற்று யட்டிகஹ கோரளை (வடக்கில்) பண்டுவஸ்நுவர பிரதேச செயலகப் பிரிவில் படுவஸ்நுவர பிரதேச சபை எல்லைகளுக்குள் ஹிதியமுல்ல கிராம அலுவலர் பிரிவு இல. 1405 இல் ஹிதியமுல்ல கிராமத்தில் அமைந்த "கோங்கஹமுல பில்லேவ மற்றும் தலுபொத்தேஹேன தற்போது வத்த மீகஹமுலவத்த, அம்பகஹமுலவத்த மற்றும் லொலுகஹமுலவத்த" என அழைக்கும் ஒன்றிணைத்த காணி களின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எச். ஏ. எம். சீ. பண்டார தயாரித்த 2011.12.06 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 5066 இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு - வடக்கு : தற்போது டப்ளியூ. எம். ரீ. எம். எல். பெர்ணாண்டோ என்பவருக்குச் சொந்தமான காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எச். ஏ. எம். சீ. பண்டார தயாரித்த 1994.07.24 ஆந் திகதிய 1065 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித் துண்டு 01 இன் மிகுதிப் பகுதியையும் தற்போது ஆர். டீ. திலக்க ரத்ன என்பவருக்குச் சொந்தமான காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யூ. ஏ. சிறிசேன தயாரித்த 2006.08.22 ஆந் திகதிய 543 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள 2 ஆம் இலக்க காணித்துண்டையும்; கிழக்கில்: தற்போது டப்ளியூ. எம். ரீ. எம். எல். பெர்னாண்டோ என்பவரால் உரிமை கோரப்படும் 1065 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்ட 1 ஆம் இலக்க காணித்துண்டையும் தற்போது ஆர். டீ. ரத்நாயக்க உரிமை கோரும் 543 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள 02ஆம் இலக்க காணித்துண்டையும் வீதியையும் (நெடுஞ்சாலை) 543 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள 05 ஆம் இலக்க காணித்துண்டையும் தற்போது ஜீ. எம். சேனாரத்ன என்பவரால் உரிமை கோரப்படும் வை. எம். ஏ. யாப்பா தயாரித்த 1993.04.05 ஆந் திகதிய 3547 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள 03 ஆம் இலக்க காணித்துண்டின் மிகுதிப் பகுதியையும்; தெற்கில்: குறித்த 543ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள 05 ஆம் இலக்க காணித்துண்டையும் தற்போது ஜீ. எம். சேனாரத்ன என்பவரால் உரிமை கோரப்படும் 3547 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள 03 ஆம் இலக்கக் காணித்துண்டையும் ஜீ.பீ.ரத்நாயக்க மற்றும் பிறரால் உரிமைகோரப்படும் நெல் வயலையும்; மேற்கில்: கே. ஏ. ஆர். ஜயசுமன என்பவரால் உரிமைகோரப்படும் 3547 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள 02, 04 ஆம் இலக்கக் காணித்துண்டுகளையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. ஒரு ஏக்கர் இரண்டு றூட் பதினேழு தசம் ஆறு பேர்ச்சுகள் (1ஏ.2றூ.17.6பே.) பரப்பளவையும் அதன் கண் காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்தும் கொண்ட இக்காணி குளியாப்பிட்டிய காணிப்பதிவகத்தில் பக்கம் Q29/10 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி.

R.M.S. ராஜபக்ஷ,
பிரதான முகாமையாளர்.

இலங்கை வங்கி,
தனியாள் கிளை.

4- 98

---

### பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீ.எல்.சீ.

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பகிரங்க ஏல விற்பனை*

பேன் ஏசியா வங்கித் பேங்கிங் கோப்பரேஷன் பீ.எல்.சீ. யினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள கீழ்க்காணும் அதிகாரத்தின் பிரகாரம், கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆதனம் பின்வரும் திகதியில் பின்வரும் நேரத்தில் அவ்வாதனம் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், (கொழும்பு பதிவுப் பிரிவிற்குள்), பல்லேபத்துவ, சல்பிட்டி கோரளை, திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவு, பாமன்கட கிழக்கு கிராம அலுவலர் பிரிவு, கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட, பாமன்கட கிழக்கு, வட்டார இல.45, பாமன்கடயில் அமைந்துள்ள ( முன்னர் ஹெவ்லொக் வீதி), ஸ்ரீ சம்புதத்வ ஜயந்தி மாவத்தை, வரிப்பண இல. 599A ஐக் கொண்ட "அம்பகஹவத்த" என்று அழைக்கப்படும் காணி (ஆரம்ப வரைபட இல. 9345 இல் காணித்துண்டு 29 என விபரிக்கப்பட்டுள்ள ஸ்ரீ சம்புதத்வ மாவத்தையை விரிவுபடுத்துவதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் கைப்பற்றபட்டதன் பின்னர் மீதமுள்ள விஸ்தீரணமானது நில அளவையாளர் நாயகத்தின் சார்பாக கொழும்பு மாவட்ட சிரேஷ்ட அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்டது) ( கிருளப்பனையில் பதிவு செய்யப்பட்ட வரைபட இல. 4 இல் காணித்துண்டு 10 இன் உபபிரிவானது உரிமம் பெற்ற நில அளவையாளர் K. தியாகராஜா என்பவரினால் 1985.05.05 ஆந் திகதிய வரைபட இல. 870 இல் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 2511 இன் அளவையாகும்.) பிரசித்த நொத்தாரிசு G.B. தொடன்வெல்ல என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2021.01.21 ஆந் திகதிய வரைபட இல. 15162 இல் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டாகும். மேலும் இது நான்கு தசம் இரண்டு பூச்சியம் அல்லது பூச்சியம் தசம் ஒன்று பூச்சியம் ஆறு விஸ்தீரணமுடையது.

( விஸ்தீரணம்- 00ஏ.00றூ.4.20பே. அல்லது 0.0106 ஹெக்டயார்) ( நான்கு தசம் இரண்டு பூச்சியம் பேர்ச்அல்லது பூச்சியம் தசம் பூச்சியம் ஒன்று பூச்சியம் ஆறு ஹெக்டயார் )

2022, ஏப்பிறல் 27 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு.

"கடப்பாடுடையவர்களான" மொஹமட் அமீன் மொஹமட் சபீர் மற்றும் இஸ்மத் மொஹமட் சித்தீக் நூர் மொஹமட் என்று அறியப்படும் மொஹமட் இஸ்மத் மொஹம்மட் சித்தீக் நூர் மொஹமட் மற்றும் "ஈடுவைத்தவரான" மொஹமட் அமீன் மொஹமட் சபீர் ஆகியோர், பதிவு இல. பீகியூ 48 ஐக் கொண்ட பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ யின் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு நளினி கணேசயோகன் அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2006.04.05 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை மிதக்கும் ஈட்டு முறி

இல. 1156, 2006.04.05 ஆந் திகதியிடப்பட்ட இரண்டாம் ஈட்டு முறி இல. 1158, 2007.07.20 ஆந் திகதியிடப்பட்ட மூன்றாம் ஈட்டு முறி இல. 1585 மற்றும் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு J.I. வடுதந்திரி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2015.02.19 ஆந் திகதியிடப்பட்ட நான்காம் ஈட்டு முறி இல. 260 மற்றும் 2016.09.07 ஆந் திகதியிடப்பட்ட ஐந்தாம் ஈட்டு முறி இல. 425 மற்றும் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு A.V.N. சந்திமா அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2017.11.21 ஆந் திகதியிடப்பட்ட மேலதிக ஈட்டு முறி இல. 642 என்பவற்றின் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளனர்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** 2019.11.22 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் மற்றும் 2019.11.15 ஆந் திகதிய "திவயின", "த ஐலண்ட்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்தை வந்தடைதல்.-** கொழும்பிலிருந்துஹெவ்லொக் பாதை, ரீட் எவன்யூ, டவுன் ஹோல் வழியாக ஹெவ்லொக் நகரத்திற்கு சுமார் 7. கீ.மீ. தூரம் வரை வந்து ஹவ்லொக் பாமன்கட பாலத்தினூடாக சுமார் 1 கி.மீ. வரை பயணிக்கவும்.

கிருளப்பனையிலிருந்து ஸ்ரபோர்ட் எவன்யூ ஊடாக பாமன்கட பாலம் வரை வந்து வலது பக்கம் ஹெவ்லொக் பாதைக்குத் திரும்பி சுமார் 100 மீற்றர் தொடர்ந்து வந்து கோமஸ் பிளேஸ் ஐ கடக்கும் போது காணியானது இடது பக்கம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு முறை.-** கீழ்க் காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும் :-

1. கொள்முதல் விலையின் 10%;
2. உள்நாட்டு இறைவரி மற்றும் வெட் வரி 1% ;
3. ஏலவிற்பனையாளரின் கட்டணம் கொள்முதல் விலையில் 2.5% (இரண்டரை வீதம்) ;
4. சகல பகிரங்கப்படுத்தல் செலவுகள்;
5. விற்பனை நிபந்தனை தொடர்பாக நொத்தாரிசு அத்தாட்சிப்படுத்தல் கட்டணம்ரூபா 5,000.00;
